தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப் பெருக்கு

# கெலவரப்பள்ளி அணையிலிருந்து 1410 கனஅடி, கிருஷ்ணகிரி அணையிலிருந்து 3571 கனஅடி தண்ணீர் திறப்பு



கெலவரப்பள்ளி அணையில் ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் ச.தினேஷ்குமார்.

**ஒசூர், மே 21:** ஒசூர் கெலவரப்பள்ளி அணையிலிருந்து விநாடிக்கு 1410 கனஅடி தண்ணீர் தென்பெண்ணை ஆற்றில் புதன்கிழமை திறந்துவிடப்பட்டது.

தென்பெண்ணை ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் கெலவரப்பள்ளி அணைக்கு நீர்வரத்து புதன்கிழமை 1410 கன அடியாக உள்ளது. அணைக்கு வரும் தண்ணீர் முழுமையாக தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்படுகிறது.

அணைக்கு வரும் தண்ணீர் ரசாயனம் கலந்த நுரையுடன் அசுத்தமாக இருப்பதால் தண்ணீர் துர்நாற்றம் வீசுகிறது.

மேலும், தென்பெண்ணை ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீர் மிகுந்த நுரையுடன் கரை புரண்டோடுகிறது. இந்த தண்ணீரை விவசாயம், கால்நடைகளுக்கு பயன்படுத்த விவசாயிகள் தயக்கம்காட்டி வருகின்றனர்.

புதன்கிழமை அணை பகுதியில் உள்ள தொங்குபாலம் வழியாக சென்று மதகுகளின் பாதுகாப்பு குறித்து ஆட்சியர் ச.தினேஷ்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

சார் ஆட்சியர் பிரியங்கா, உதவி செயற்பொறியாளர் மோகன், உதவி பொறியாளர்கள் சிவசங்கம், ராதிகா ஆகியோர் உடனிருந்தனர்.

**கிருஷ்ணகிரி, மே 21:** கிருஷ்ணகிரி அணையிலிருந்து புதன்கிழமை விநாடிக்கு 3571 கனஅடி தண்ணீர் தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மழைப் பொழிவு குறைந்ததையடுத்து அணையிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு விநாடிக்கு 3571 கனஅடி குறைந்தது. தென்பெண்ணை ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த 10 நாள்களுக்கும் மேலாக தொடர்ந்து மழை பெய்துவந்தது. இதனால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கெலவரப்பள்ளி அணை, கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்தது.

இதைத் தொடர்ந்து, அணையின் பாதுகாப்பு கருதி அணையிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. செவ்வாய்க்கிழமை நிரவரப்படி விநாடிக்கு 4500 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. இந்த நிலையில், புதன்கிழமை காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு நீர்வரத்து 3268 கன அடியாக குறைந்ததால் அணையிலிருந்து பிரான மதகுகள் மற்றும் 3 மணல் போக்கி சிறிய மதகுகள் வழியாக விநாடிக்கு 3571 கனஅடி தண்ணீர் தென்பெண்ணை ஆற்றில் திறந்துவிடப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் மொத்தம் 52 அடியில் 50.85 அடியாக உள்ளது. கிருஷ்ணகிரி அணை பூங்காவுக்கு செல்லும் தரைப்பாலம் நீரில் மூழ்கியதால் சுற்றுலாப் பயணிகளுக்கு தடை நீட்டிக்கப்பட்டுள்ளது. தென்பெண்ணை ஆற்றின் கரையோரத்தில் தாழ்வான பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு விடப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை 2 ஆவது நாளாக நீட்டிக்கப்பட்டுள்ளதாக நீர்வளத் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதன்கிழமை காலை 7 மணி நிலவரப்படி பதிவான மழையளவு (மி.மீ): அஞ்செட்டி– 8.4, பெனுகொண்டாபுரம்– 7.2, கிருஷ்ணகிரி அணை– 6.8, தேன்கனிக்கோட்டை- 3, கெலவரப்பள்ளி அணை– 3, ஒசூர்– 2, ஊத்தங்கரை– 1.8.

# போலி பூச்சிமருந்துகள் விற்பனை: மா விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

**கிருஷ்ணகிரி, மே 21:** கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தரமற்ற போலி பூச்சிமருந்து விற்பனையை தடுக்க வலியுறுத்தி தமிழக உழவர் பேரியக்கம் சார்பில் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாடத்துக்கு அந்த அமைப்பின் மாநில துணைச் செயலாளர் ரவீந்திரன் தலைமை வகித்தார். மாநிலத் தலைவர் ஆலயமணி, செயலாளர் வேலுசாமி, வன்னிர் சங்க மாநில துணைத் தலைவர் பாடி செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாவுக்கு உரிய விலை நிர்ணயம் செய்ய முத்தரப்பு பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும். கடந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட மா விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டும். தரமற்ற, போலி பூச்சி மருந்து விற்பனையைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாங்கூழ் உற்பத்தியாளர்கள், மாங்காய்களை கொள்முதல் செய்ய உள்ளூர் விவசாயிகளுக்கு முக்கி யத்துவம் அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் முழக்கங்களை எழுப்பினர். அதைத் தொடர்ந்து தங்களது கோரிக்கைகளை அரசுக்கு பரிந்துரைக்கக் கோரி கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில்

# 23 முதல்வர் மருந்தகங்களில் ரூ. 7.77 லட்சத்துக்கு மருந்துகள் விற்பனை

**கிருஷ்ணகிரி, மே 21:** கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 23 முதல்வர் மருந்தகங்களில் ரூ. 7.77 லட்சத்துக்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ்குமார் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கூட்டுறவுத் துறை சார்பில் செயல்படும் முதல்வர் மருந்தகங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் பேசியதாவது:

ஏழைகளுக்கு குறைந்த விலையில் மருந்துகளை விற்பனை செய்வதற்காக முதல்வர் மருந்தகம் பிப்ரவரி 24-இல் தொடங்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் சார்பில் 12 முதல்வர் மருந்தகங்கள், தொழில்முனைவோர்களின் 11 முதல்வர் மருந்தகங்கள் என மொத்தம் 23 மருந்தகங்கள் செயல்படுகின்றன.

இந்த மருந்தகங்கள் மூலம் ரூ. 7.77 லட்சம் மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் பொதுமக்களுக்கு ரூ.2.23 லட்சம் தள்ளுபடி கிடைத்துள்ளது. பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய மருந்துகளை போதிய அளவில் இருப்புவைத்து விற்பனை செய்ய வேண்டும். பிற மருந்தகங்களில் விற்பனை செய்யப்படும் மருந்துகளின் விலையைவிட முதல்வர் மருந்தகங்களில் மருந்துகளின் விலை குறைவாக உள்ளது என்று பொதுமக்களிடம் எடுத்துரைக்க வேண்டும் என்றார்.

கூட்டத்தில் கூட்டுறவு விற்பனை சங்க மேலாண்மை இயக்குநர் பெரியசாமி, ஒசூர் துணைப்பதிவாளர் விஜயலட்சுமி, முதல்வர் மருந்தகங்களில் பணிபுரியும் மருந்தாளுநர்கள் மற்றும் முதல்வர் மருந்தக தொழில்முனைவோர்கள் பங்கேற்றனர்.

# தமிழக எல்லை சோதனைச்சாவடியில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் சோதனை

ரூ. 1.43 லட்சம் பறிமுதல்

**கிருஷ்ணகிரி, மே 21:** தமிழக- ஆந்திர மாநில எல்லையில் உள்ள காளிக்கோயில் சோதனைச்சாவடியில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் புதன்கிழமை நடத்திய சோதனையில் கணக்கில் வராத ரூ. 1.43 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், காளிக்கோயில் கிராமத்தில் ஆந்திர மாநில எல்லையில் கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலக சோதனைச்சாவடி உள்ளது. இந்த சோதனைச்சாவடியில் ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகத்துக்குள் வரும் வாகன ஓட்டுநர்களிடம் லஞ்சம் பெறப்படுவதாக கிருஷ்ணகிரி லஞ்ச ஒழிப்பு போலீஸாருக்கு புகார் வந்ததையடுத்து லஞ்ச ஒழிப்பு துணை காவல் கண்காணிப்பாளர் (பொறுப்பு) நாகராஜன் தலைமையிலான போலீஸார் காளிக்கோயில் சோதனைச்சாவடியில் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது, கணக்கில் வராத ரூ. 1.43 லட்சத்தை போலீஸார் பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாக சோதனை சாவடியில் பணியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் சையத் ஜவ்வாது அஹமத்திடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பாகலூர் சாலையை அகலப்படுத்த வலியுறுத்தல்

**ஒசூர், மே 21:** ஒசூர்- பாகலூர் சாலையை நான்குவழிச் சாலையாக அகலப்படுத்தி, நடைபாதைக்கு என தனியாக பாதை அமைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர், ஒசூர் சார் ஆட்சியர், மேயரிடம் ஒசூர் அனைத்து குடியிருப்பு நலச் சங்கத்தின் தலைவர் துரை கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

எதிர்கால போக்குவரத்தை கவனத்தில்கொண்டு ஒசூர்- பாகலூர் சாலையை 1.5 கி.மீட்டருக்கு 4 வழிச் சாலையாக அகலப்படுத்தி, நடைபாதைக்கு தனியாக பாதை அமைக்க வேண்டும். இதுகுறித்து அனைத்துக் கட்சி, அரசு அலுவலர்கள், பொதுமக்களிடம் மாநகராட்சி ஆலோசிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...
தருமபுரி : 84896 34827
பாலக்கோடு
அரூர் 85081 38448
பொம்மிடி
கிருஷ்ணகிரி
ஊத்தங்கரை
ஒசூர் 99401 44526
பர்கூர்
உதவி மைய எண் : 88070 00218

தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்பு கொள்ள...
தருமபுரி 99523 48226
அரூர் 94436 19137
கிருஷ்ணகிரி 97866 70077
ஊத்தங்கரை 95438 12474
ஒசூர் 9443041404
பென்னாகரம் 90956 56769



Government of Tamil Nadu
**TAMIL NADU PUBLIC WORKS DEPARTMENT**
OFFICE OF THE SUPERINTENDING ENGINEER, PWD
BUILDING (CONSTRUCTION & MAINTENANCE) CIRCLE 2, CHEPAUK, CHENNAI-600 005.
e-Tender Notice No. 04 BCM/2025-2026/dated: 20.05.2025.
NOTICE FOR PRE-QUALIFICATION FOR THE SELECTION OF ARCHITECT / ARCHITECTURAL FIRMS
EXPRESSION OF INTEREST FOR ARCHITECTURAL & PROJECT MANAGEMENT CONSULTANCY (PMC) SERVICES
CONSTRUCTION OF ADDITIONAL GUEST HOUSE (3rd GUEST HOUSE) FOR TAMIL NADU HOUSE AT PLOT No.4, SECTOR 19, DWARAKA, NEW DELHI

1. For and on behalf of the Governor of Tamil Nadu, the Superintending Engineer, PWD., Buildings (Construction & Maintenance) Circle 2, Chennai invites e-tenders from the leading Architect / Architectural Firms, registered in the Council of Architecture in India / Equivalent to provide comprehensive Architectural Consultancy Services and PMC services towards Master planning for a total land area of about 0.79 Acres and detailed architectural design and structural design for Additional Guest House (3rd guest house) for Tamil Nadu house at plot no.4, Sector 19, Dwaraka, New Delhi for an area of 3197.58 sq.m.

SELECTION PROCESS

2. The selection process will be done in a transparent manner by going through Pre-qualification and short listing based on minimum qualification criteria and final selection based on merits of designs.
3. The Architect / Architectural firms meeting the following minimum qualification criteria over the past five financial years ending March 2025 can apply along with documentary evidence to the satisfaction of the Evaluation Committee for the Pre-qualification.
a. Architect / Architectural Firms shall be a consultant/registered individual architect/architectural firm having registered with the council of architecture for providing architectural services and the bidding firm should have been in architectural and project management consultancy services field for a minimum of 10 years.(Copy of the Completion Certificate from the Employer to be produced.)
b. Architect / Architectural Firms should have provided Comprehensive Architectural Consultancy Services for similar nature of project in the last five years (as on date of publication of Notice) as mentioned below: (a) at least one project costing more than Rs.80.00 crores or (b) two projects each costing more than Rs.60.00 crores or (c) three projects each costing more than Rs.40.00 crores (Copy of work order and completion certificate from the employer /client to be furnished).
c. Architect / Architectural Firms should have an average Annual Financial Turnover of Rs.500.00 Lakhs (exclusively from design and consultancy services) during the last three consecutive financial years i.e., 2021-22, 2022-23 and 2023-2024. (Copy of Income Tax Statement of Profit and Loss Account statement to be furnished)
d. Architect / Architectural Firms who have been debarred / terminated from any other Consultancy services for Government / Private buildings will not be eligible for participation.
4. Architect / Architectural Firms should also provide documents demonstrating their in-house facilities.
5. The Architect / Architectural Firms should remit an EMD for a value of Rs.2,10,000/- through online only.
6. The offers received will be evaluated by a Committee with reference to the eligibility criteria and short listed Architect / Architectural Firms will be communicated immediately for technical presentation.
7. The short listed Architect / Architectural Firms should submit the detailed site plan with the detailed plan and elevation of proposed structures along with th overall plan and structural design and detailed drawings for the proposed Additional Guest House for Tamil Nadu House. The drawings, plans and structural design drawings should be submitted in both hard copy and soft copy preferably in AutoCAD Format.
8. The selected Architect / Architectural Firms will have to provide at least two option plans, landscape and proposed structures offering services such as providing plans, sketches, 3D elevation / walk through designs, models to the scale and utility details and the structural design and drawings for the final approved plans within thirty days after final selection of Firm. The selected firms will be directed to make a presentation on their proposals and capabilities.
9. The last date for receipt of e-tender through online is upto **15.00 hours on 26.06.2025. For Tender documents: visit https://tntenders.gov.in , Pre Bid Meeting: 12.06.2025 at 11.30 am ,Email address: sepwdbcmcchi@gmail.com**

DIPR/2412/TENDER/2025
Superintending Engineer, PWD.,
Building(Construction & Maintenance) Circle-2 Chepauk, Chennai – 600 005



**தமிழ்நாடு அரசு - பொதுப்பணித்துறை**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 08/2025- 2026/க(கப)ம-1/சென்னை/ நாள்: 20.05.2025
ஒப்பந்தம் - Lumpsum (இணையதள வழியில் மட்டும்)
தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்-1, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண். | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு லட்சங்களில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணிமுடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| | இரு உறை முறை | | | |
| 1 | சென்னை-10, கீழ்ப்பாக்கம், மனநல நிறுவனத்தில் 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டும் பணி | ரூ.3088.00 இலட்சங்கள் | ரூ.15,55,000/- 18 (பதினெட்டு) மாதங்கள் | பொதுப்பணித் துறையில் பதிவு பெற்ற வகுப்பு - IA மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |

குறிப்பு- 1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in. 2. பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள். 16.06.2025. 3. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 20.06.2025 மாலை 3.00 மணி வரை. 4. பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 20.06.2025 மாலை 4.00 மணி. 5. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்.
செ.ம.தொ.இ/2411/ஒப்பந்தப்புள்ளி/2025
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்-1, சேப்பாக்கம், சென்னை-5.



**கோயம்புத்தூர் மாநகராட்சி**
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை (e-Tendering)
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.(e)29/2025 நாள் : 20.05.2025

| வ. எண் | பணியின் விவரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | மத்திய மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 17 பணி | 09.06.2025 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 10.06.2025 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in, ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம், பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் –641001. தொலைபேசி எண்.0422 –2396026. Email : commr.coimbatore@tn.gov.in
செ.ம.தொ.இ./2482/ஒப்பந்தப்புள்ளி/2025 ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.



**ஈரோடு மாநகராட்சி**
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.எண். இ1 / 2457 / 2025. நாள் : 20.05.2025.
ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டவரால் 15th CENTRAL FINANCE COMMISSION - (UNTIED GRANT) 2025-26-ம் மானிய பணிகளுக்கு E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மொத்த பணிகளின் எண்ணிக்கை - 6. இந்த பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ.380.00 இலட்சங்கள். ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களையும் (E-Mail id: commr.erode@tn.gov.in Phone No.: 0424-2251616) என்ற முகவரியில் பெறலாம்.
ஒப்பந்தப்புள்ளி நேரம் மற்றும் நாள்:
அ) ஒப்பந்தப்புள்ளி இறக்கம் செய்தல் : 22.05.2025 முதல் 11.06.2025 வரை (3.00 P.M.)
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 11.06.2025 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் : 11.06.2025 மாலை 3.30 மணி
ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.
செ.ம.தொ.இ/2478/ஒப்பந்தப்புள்ளி/2025 ஆணையாளர் (பொ), ஈரோடு மாநகராட்சி.



**தமிழ்நாடு அரசு – பேரூராட்சிகள் துறை**
ந.க.எண். 1254/2025/பா1 திருநெல்வேலி மண்டலம் நாள்.20.05.2025
திருநெல்வேலி மண்டலம் திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் 2024–2025 ஆம் நிதியாண்டில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் 24 இருபத்தி நான்கு எண்ணம் கசடு மற்றும் கழிவுநீர் அகற்றும் வாகனம் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரண்டு உறைகள் முறைகள்)
1) திருநெல்வேலி மண்டலம் திருநெல்வேலி மாவட்டம் கோபாலசமுத்திரம்–1, மணிமுத்தாறு–1, மேலச்செவல்–1, மூலைக்கரைப்பட்டி–1, திருக்குறுங்குடி–1, தென்காசி மாவட்டம் அச்சன்புதூர்–1, ஆழ்வார்குறிச்சி–1, இலஞ்சி–1, மேலகரம்–1, பண்பொழி–1, புதூர்(செ)–1, இராயகிரி–1, சுந்தரபாண்டியபுரம் –1, திருவேங்கடம்–1, தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார்திருநகரி–1, ஆத்தூர்–1, ஏரல்–1, எட்டையபுரம்–1, கழுகுமலை–1, கயத்தாறு–1, விளாத்திகுளம்–1, சாத்தான்குளம்–1, சாயர்புரம்–1, திருவைகுண்டம்–1 ஆகிய பேரூராட்சிகளில் 2024–2025 ஆம் நிதியாண்டில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் 24 (இருபத்தி நான்கு) எண்ணம் கசடு மற்றும் கழிவுநீர் அகற்றும் வாகனம் கொள்முதல் செய்வதற்கான இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால், தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து பணிகள் வாரியாக இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனியாக வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விபரங்களை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். 2) பணியின் மதிப்பீடு ரூ. 1038.00 இலட்சம். 3) பணி வாரியான ஒப்பந்தப்புள்ளி நகல்களை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம். 4) பொதுவான நேரம் மற்றும் நாள்.
அ) ஒப்பந்த நகலை பதிவிறக்கம் செய்தல் : 22.05.2025 காலை 10.00 மணி முதல் 23.06.2025 மாலை 3.00 மணி வரை
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 23.06.2025 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் : 23.06.2025 மாலை 3.30 மணி
ஈ) முன் கலந்தாய்வு கூட்டம் : 10.06.2025 காலை 11.00 மணி
ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக இருப்பின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.
செ.ம.தொ.இ / 2420 /ஒப்பந்தப்புள்ளி/2025 பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம்.



தமிழ்நாடு அரசு
**நீர்வளத்துறை**
பவானி வடிநில வட்டம், ஈரோடு –11
மின்னணு முறை ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். 2/2025–26/ பவவ/ஈரோடு/நாள். 20.05.2025
தமிழ்நாடு ஆளுநருக்காக அவரது சார்பில் நீர்வளத்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் பணிகளுக்கான மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி கீழ் கையொப்பம் இட்டவரால் 10.06.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | தோராய மதிப்பீட்டுத் தொகை (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) | முன் வைப்புத் தொகை | பணி முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்தக்காரரின் உரிய பதிவு வகுப்பு |
|---|---|---|---|---|---|
| | மொத்த வகை ஒப்பந்தம் – இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளி | | | | |
| 1 | ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டத்தில் உள்ள உக்க பாசப்பரியல் கட்டமைப்பான காளிங்கராயன் அணைக்கட்டினை புனரமைப்பு செய்யும் பணி | ரூ. 134.00 இலட்சம் | ரூ. 77,000/- | 17 மாதங்கள் | வகுப்பு –IV ரூ.1.00 கோடி முதல் ரூ.2.00 கோடி வரை) நீ.வ.து – மின் பதிவு விதிகளின்படி (அ) வகுப்பு – IV (ரூ.50.00 இலட்சம் முதல் ரூ.2.00 கோடி வரை) நீ.வ.து – மின் பதிவு விதிகளின்படி |

ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக, ஒப்பந்தப்புள்ளி அழைப்பு முதல் பணி ஆணை வழங்குதல் வரையிலான அனைத்து ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளும் / செயல்முறைகளும் https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக மின்னணு முறையிலேயே மேற்கொள்ளப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய நிர்ணயிக்கப்பட்ட காலம் | : | 26.05.2025 முற்பகல் 11.00 மணி முதல் 10.06.2025 பிற்பகல் 3.00 மணி வரை |
| 2 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பதிவேற்றம் செய்ய இறுதி நாள் | : | 10.06.2025 பிற்பகல் 3.00 மணி வரை |
| 3 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் திறக்கப்படும் நாள் | : | 11.06.2025 பிற்பகல் 3.30 மணி |
| 4 | மற்ற அனைத்து விபரங்களும் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் கிடைக்கும் | | |

செ.ம.தொ.இ. / 2419 /ஒப்பந்தப்புள்ளி/2025
கண்காணிப்புப்பொறியாளர், நீ.வ.து, பவானிவடிநில வட்டம், ஈரோடு –11



**கோயம்புத்தூர் மாநகராட்சி**
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை (e-Tendering)
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.(e)31/2025 நாள் : 20.05.2025

| வ. எண் | பணியின் விவரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 33 பணி | 16.06.2025 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 17.06.2025 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in, ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம், பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் –641001. தொலைபேசி எண்.0422 –2396026. Email : commr.coimbatore@tn.gov.in
செ.ம.தொ.இ./2483/ஒப்பந்தப்புள்ளி/2025 ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.



**கோயம்புத்தூர் மாநகராட்சி**
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை (e-Tendering)
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.(e)28/2025 நாள் : 20.05.2025

| வ. எண் | பணியின் விவரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 23 பணி | 05.06.2025 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 06.06.2025 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in, ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம், பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் –641001. தொலைபேசி எண்.0422 –2396026. Email : commr.coimbatore@tn.gov.in
செ.ம.தொ.இ./2484/ஒப்பந்தப்புள்ளி/2025 ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.



**எஸ்எம்எப்எல் சர்வீசஸ் லிமிடெட்**
(முன்னர் S.M.I.L.E. மைக்ரோ ஃபைனான்ஸ் லிமிடெட்)
பதிவு அலுவலகம்: 8வது தளம், தெற்கு டவர், கேஆர்எம் பிளாசா, எண். 2, ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 600031. மின்னஞ்சல் : smflliq@gmail.com, knpchennai@gmail.com
இணையதளம் :www.sfltd.in CIN: U70200TN1995PLC030604

மூன்றாவது பங்களிப்பாளர்களின் கூட்டத்திற்கான அறிவிப்பு
நொடித்தல் மற்றும் இந்திய திவால்நிலை வாரியத்தின் (தன்னார்வக் கலைப்பின் கீழ்) விதிமுறைகள், 2017-ன் 37(2)வது விதியின் கீழ், எஸ்எம்எப்எல் சர்வீசஸ் லிமிடெட்டின் மூன்றாவது பங்களிப்பாளர்களின் கூட்டம் (தன்னார்வக் கலைப்பு நடைமுறை) **மே 28, 2025,** புதன்கிழமை அன்று, எண். 6, முதல் தளம், கோல்டன் என்கிளேவ், 184, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா 600010-உள்ள கலைப்பு அலுவலர் அலுவலகத்தில் மாலை 4.00 மணிக்கு காணொளி காட்சி மூலம் பின்வரும் வணிகத்தை பரிவர்த்தனை செய்ய நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. கலைப்பு அலுவலர் பங்களிப்பாளர்கள் கூட்டத்தின் தலைவராக செயல்படுவார்.
**1. IBBI (தன்னார்வ கலைப்பு நடைமுறை) விதிமுறைகள், 2017-ன் விதி 37 (2) (b)-ன் படி பின்வரும் விஷயங்களைப் பற்றி விவாதிக்க:-**
கலைப்பு அலுவலர். கலைப்பு நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை முன் வைப்பது உட்பட:
(i) பங்குதாரர்களின் செட்டில்மெண்ட் பட்டியல்
(ii) விற்கப்படாமல் மீதமுள்ள விற்கப்பட வேண்டிய அனைத்து சொத்துக்களின் விவரங்கள்,
(iii) பங்குதாரர்களுக்கு விநியோகம்.
(iv) பங்குதாரர்களுக்கு விற்கப்படாத சொத்துக்களின் விநியோகம்:
(v) கார்ப்பரேட் நபர் மூலமாகவோ அல்லது எதிராகவோ ஏதேனும் நிதி சம்பந்தமான வழக்குகளில் உள்ள முன்னேற்றங்கள்:
(vi) தொகுப்பின் பகுதி II-ன் அத்தியாயம் III-ன் கீழ் பரிவர்த்தனைகளைத் தவிர்ப்பதற்கான விண்ணப்பங்களை தாக்கல் செய்தல் மற்றும் முன்னேற்றங்கள்;
(vii) குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்முறையை முடிக்காததற்கான காரணங்கள் மற்றும் செயல்முறையை முடிக்க தேவையான கூடுதல் காலம்
**2. தலைவரின் அனுமதியுடன் வேறு எந்த விஷயமும்**
கூட்டத்திற்கான அறிவிப்பை நிறுவனத்தின் இணையதளத்திலும் பார்க்கலாம்: **http://sfltd.in**
தன்னார்வ கலைப்பு துவங்கிய தேதியான, அதாவது **ஆகஸ்ட் 16, 2024** அன்று, உறுப்பினர்கள்/பயனுள்ள உரிமையாளர்களின் பதிவேட்டில் உள்ள நபர்கள் மட்டுமே ஆன்லைன்/மின்னணு முறையில் நடத்தப்படும் பங்களிப்புக் கூட்டத்தில் காணொளி காட்சி தள வசதியைப் பெற உரிமை உண்டு.
கூட்டம் **ஜூம் (Zoom)** மூலம் காணொளியில் நடத்தப்படும். பங்களிப்பாளர்கள் **27.05.2025** அன்று அல்லது அதற்கு முன் காணொளி காட்சி மூலம் கூட்டத்தில் பங்கேற்பதற்கான இணைப்புக்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள கலைப்பு அலுவலர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
**Mail: smflliq@gmail.com, knpchennai@gmail.com**
**Phone: 9080086782; 044-42859843**
எஸ்எம்எப்எல் சர்வீசஸ் லிமிடெட்டிற்காக
அனில் குமார் கிச்சா,
கலைப்பு அலுவலர்
பதிவு எண்: IBBI/IPA-001/IP-P00422/2017-18/10745
AFA: AA1/10745/02/311225/107802
இடம்: சென்னை
தேதி: 21.05.2025



**கோயம்புத்தூர் மாநகராட்சி**
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை (e-Tendering)
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.(e)30/2025 நாள் : 20.05.2025

| வ. எண் | பணியின் விவரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | கிழக்கு மற்றும் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 27 பணி | 11.06.2025 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 12.06.2025 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in, ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம், பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் –641001. தொலைபேசி எண்.0422 –2396026. Email : commr.coimbatore@tn.gov.in
செ.ம.தொ.இ./2485/ஒப்பந்தப்புள்ளி/2025 ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.



**தெற்கு ரயில்வே**
பொருட்கள் மேலாண்மைத் துறை
மே 2025 ஏல நிகழ்ச்சிக்கு திருத்த அறிவிப்பு
அறிவிப்பு எண்: 05/2025
இரும்புக் கழிவுகள், இரும்பு அல்லாத கழிவுகள், பிற பல்வேறு வகை கழிவுகள், பயனற்ற (Condemned) வேகன், கோச்சுகள், Locos, கழிக்கப்பட்ட ரெயில்கள் மற்றும் பிற நிரந்தரவழி கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான மின்-ஏலம் நடைபெற உள்ளது.

| மின்–ஏலம் நடைபெறும் இடம்: மதுரைக் கோட்டம் | பின்வரும் நாளில் கூடுதலாக நடைபெறவுள்ள இந்த கூடுதல் ஏல நாளும், மே 2025 ஏல அட்டவணையில், இணைக்கப் பட்டுள்ளது : 29/05/2025 | ஏலமிடப்படும் பொருட்கள்: மின்-ஏலத்தில் விற்பனை செய்யப்படும் இனங்களின் விவரங்கள், www.ireps.gov.in என்ற இணைய தளத்தில் உள்ள ஏலப் பட்டியலில் காணப்படுகின்றன. |
|---|---|---|

குறிப்பு: மே 2025 இல் திட்டமிடப்பட்டுள்ள பிற அனைத்து ஏல நிகழ்ச்சிகளும் எந்த மாற்றமும் இல்லாமல் நடைபெறும்.
விரிவான வரைமுறைகள் மற்றும் நெறிமுறைகளுக்கும் மேலும் ஏலப்பட்டியலைப் பதிவிறக்கம் செய்யவும், நமது இணையதளமான https://www.ireps.gov.in -> E-Auction -> Sale -> Live Auctions -யை கனிவுடன் அணுகலாம்.
தலைமை முதன்மை பொருட்கள் மேலாளர்



**Godrej Finance Limited**
Godrej | FINANCE
பொது அறிவிப்பு
**இந்திய ரிசர்வ் வங்கியின் (வங்கியில்லா நிதி நிறுவனம் - அளவீடு சார்ந்த ஒழுங்குமுறை) உத்தரவுகள், 2023 இன் பத்தி 43 இன் படி 'கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்' வழங்கும் பொது அறிவிப்பு.**
**கோத்ரெஜ் ஃபைனான்ஸ் லிமிடெட** (இனிமேல் "நிறுவனம்" அல்லது "GFL" என்று குறிப்பிடப்படுவது) 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இணைக்கப்பட்ட ஒரு பொது வரையறுக்கப்பட்ட நிறுவனம் ஆகும் (கார்ப்பரேட் அடையாள எண் U67120MH1992PLC065457). இது இந்திய ரிசர்வ் வங்கியால் (CoR. எண்: 13.00368) வைப்புத்தொகை பெறாத வங்கியில்லா நிதி நிறுவனமாக ("NBFC") பதிவு செய்யப்பட்டுள்ளது. GFL தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை கோத்ரேஜ் ஒன், பிரோஜ்ஷாநகர், கிழக்கு எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை, விக்ரோலி (கிழக்கு), மும்பை - 400079, மகாராஷ்டிரா என்ற முகவரியில் கொண்டுள்ளது.
இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், நிறுவனம் தனது கிளை அலுவலகத்தை மை பிராஞ்ச் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், கந்தஸ்வர்ணா ஷாப்பிங் மால், 1/194.1,2, சாரதா கல்லூரி சாலை, ஃபேர்லேண்ட்ஸ், சேலம் - 636015, தமிழ்நாடு என்ற முகவரியிலிருந்து செயல்பாட்டு காரணங்களுக்காக இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் 2வது தளம், கந்தஸ்வர்ணா மெகா மால், பிளாக் A 191, சாரதா கல்லூரி சாலை, ஃபேர்லேண்ட்ஸ், சேலம் - 636016, தமிழ்நாடு என்ற முகவரிக்கு மாற்றுகிறது.
அனைத்து வாடிக்கையாளர் கேள்விகளையும் **customercare@godrejcapital.com** என்ற மின்னஞ்சல் முகவரியில் கேட்கலாம்.
இது தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் அல்லது கேள்விகள் இருந்தால், இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் தலைமை இணக்க அதிகாரி திரு. யோகேஷ் ஜெயின் அவர்களுக்கு அல்லது **gfl.compliance@godrejfinance.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் தெரிவிக்கலாம்.
கையொப்பமிடப்பட்டது
கோத்ரெஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பாக
இடம்: மும்பை
தேதி: 22/05/2025